ஈட்டுறுதி மருந்தகங்களுக்கெனக் கட்டப்பட்ட கட்டிடங்களைத் திறப்பதற்கான விழா 3-6-1969 தேதியன்று மதுரை, அதைச் சார்ந்த புறநகர்களிலுள்ள ஈட்டுறுதி செய்து கொண்டோர் குடும்பத்தினருக்குத் தொழிலாளர் நல ஈட்டுறுதி செய்து கொண்டோர் குடும்பத்தினருக்குத் தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பணி திட்டத்தை நீட்டிக்கும் ஆரம்ப விழாவோடு இணைக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(3) அறிவிப்புகள்.

(அ) அரசின் போலீஸ் அடக்கு முறைக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப் பினர் திரு. எம். சுரேந்திரன், திரு. என். சங்கரய்யா, திரு. க. ர. நல்லசிவன், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் சேர்ந்து, சட்டப் பேரவையின் விதி 55-ன் கீழ்க்கண்டவாறு ஒரு கண்டனத் தீர் மானம் கொடுத்திருக்கிறார்கள்—

"குறிப்பாக அரசின் போலீஸ் அடக்குமுறைக் கொள்கையை சட்டப் பேரவை கண்டிக்கிறது. அரசின் கொள்கையை ஏற்க மறுக்கிறது."

இதே போன்று மாண்புமிகு உறுப்பினர்கள், திருவாளர்கள் என். சங்கரய்யா, எம். சுரேந்திரன், க. ர. நல்லசிவன், சோ. அழகர் சாமி ஆகியோர் தனித் தனியாகவும் கண்டனத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானம் பற்றிய நமது தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 55-ஐப் பேரவைக்குப் படித்துக் காட்ட விரும்பு கிறேன்.

விதி 55 (1) கூறுவதாவது :

(1) A motion expressing want of confidence in the Ministry or a motion disapproving the policy of the Ministry in a particular respect may be made with the consent of the Speaker and subject to the following restrictions, namely :—

(*a*) leave to make the motion must be asked for after questions and before the further business set down in the list of business for the day is entered upon;

(*b*) the member asking for leave must before the commencement of the sitting of the day, leave with the Secretary a written notice of the motion which he proposes to make.

1970 ஆகஸ்ட் 26] [பேரவைத் துணைத் தலைவர்]

இந்த விதிக்கிணங்க, தீர்மானத்தின் அறிக்கை முன்னரே செயலாளரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. இப்போது இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர இப் பேரவையின் அனுமதியைப் பெறும் கட்டத்தில் உள்ளோம்.

பேரவை விதி 55-ன் படி, இந்தத் தீர்மானத்திற்கு குறைந்த பட்சம் 24 உறுப்பினர்கள் ஆதரிக்கிறவர்கள் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஆதரிப் பவர்கள், தயவுசெய்து எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்க்கண்ட கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்:

வலதுசாரி கம்யூனிஸ்ட்,
இடதுசாரி கம்யூனிஸ்ட்,
சம்யுக்த சோஷலிஸ்ட்,
பிரஜா சோஷலிஸ்ட்,
காங்கிரஸ் (அமைப்பு),
குடியரசுக் கட்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தேவையான 24 உறுப் பினர்களுக்கு அதிகமாக நிற்பதால், இந்தத் தீர்மானத்திற்குப் பேரவையின் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை விவாதிக்க நாள் பின்னர் குறிப்பிடப் படும்.

4. அவையுரிமைக் கேள்விகள்

(அ) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்பேரவை உறுப் பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட் டிருப்பது குறித்து

MR. DEPUTY SPEAKER: The Hon. Member, Thiru S. Alagarswamy has given notice of a matter of privielege which is as follows :—

"இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் குழுவின் தலைவரான திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும், உறுப்பினர் திரு. என். மருதாசலம் அவர்களும், கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். சட்டமன்றம் கூடப் போகும் அறிக்கை வெளியிட்ட பிறகுதான் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்மீது குற்றப் பத்திரிகை கூட தாக்கல் செய்யாமல் போலீஸ் காலம் கடத்தி வருகிறது.

இந்த இரு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டிருப்பதும், தொடர்ந்து சிறைப்படுத்தப்பட்டிருப்பதும் அவர்கள் சபையில் தங்கள் கடமைகளைச் செய்வதற்குத் தடையாக உள்ளது. உறுப் பினர்கள் சுதந்திரமாக செயல்படுவதில் நிர்வாகம் குறுக்கிடுவது இந்த மன்றத்தையே அவமதிப்பதற்கு ஒப்பாகும்."